ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்· 436) Feb (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஶ்ரீரங்கநாதோ ஜயது ஶ்ரீரங்கஶ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)...........................20

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 256)

வாகீச்வரி முத்திரை

69. ஸம்ச்லிஷ்டௌ மணிபந்தௌ து க்ருத்வா பாணித்வயே புரா
ஸம்லக்நமப்ரதேசாது ப்ரோந்நதம் மத்யமாயுகம்
70. ப்ரதேசிநீயுகம் தத்வத்ததைவாநாமிகாத்வயம்
அங்க்குஷ்டம் த்விகுணீ க்ருத்ய நமயேத்த ததோமுகம்
71. சநை: சநை: ஸ்ப்ருசேத்யாவத் ஸ்வம் ஸ்வம் பாணித்வயீதலம்
ஸ்புடம் ஸூவிரலம் குர்யாத் அங்குஷ்ட த்விதயம் ததா
72. கநிஷ்டிகாத்வயம் சைவ ஸமேந தரணேந து
இயம் வாகீச்வரீ முத்ரா வாணீவிபவதாயிநீ

குறிப்பு – இது வாக்கு வல்லமை அளிக்கும் வாகீச்வரி முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 401)

6-2-1 மின் இடை மடவார்கள் நின்அருள் சூடுவார்
முன்பு நான் அது அஞ்சுவன்
மன் உடை இலங்கை அரண் காய்ந்த மாயவனே
உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன்
இனி அது கொண்டு செய்வது என்
என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ

பொருள் – உன்னைத் தங்கள் பக்கம் விருப்பம் கொள்ளும்படிச் செய்யவல்ல, மின்னலைப் போன்ற நுண்ணிய இடையைக் கொண்டவர்கள் என்பதால், தங்களுடைய உருவ அழகில் எந்தக் குறையும் இல்லாதவர்களாக, மடப்பம் போன்றுள்ள ஆத்ம குணங்கள் கொண்டவர்களாக, இந்த இரண்டும் எனக்கும் உள்ளபோதிலும், என்னைப் போன்று அல்லாமல் உனது க்ருபையைத் தங்கள் தலையில் சூடியபடி, எனது தோழிமார்கள் உள்ளனர். அவர்கள் அருகாமையில் நீ செய்த செயல்களை நான் அறிவேன். நீ இவ்விதம் செய்யும் செயல்களைக் கண்டும் உனக்குத் தங்கள் முகத்தைக் காண்பிக்காமல், உன்னைத் தளர்ந்து போகும்படி அவர்கள் செய்து விடுவார்களோ என்று நான் அச்சம் கொள்கிறேன்.

இதனைக்கேட்ட நாயகனாகிய ஸர்வேச்வரன் இவளிடம், "நமக்கு உன்னைத் தவிர வேறு யாரேனும் உள்ளனரோ? நான் முன்பு ஏக பத்னி விரதம் பூண்டதால், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை விலக்கிக் கொடுத்ததை நீ அறிவாய்

அல்லவோ?", என்றான். இதற்கு இவள், " 'பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு உதவி செய்பவன்' என்று, இளமை பொருந்தியவர்களை அகப்படுத்தவதற்காகச் செய்யும் பொல்லாத செயல்கள் கொண்ட மாயவனே! உனது 'மற்றவர்களுக்கு வசப்பட்டவன்' என்பதான் செயலை, மற்றவர்கள் போன்று அல்லாமல், உனது நினைவுகளை அறியும் நான், நன்றாக அறிவேன். இனி அது போன்று என்னிடம் செய்ய இயலுமோ? நான் ஒருவள் மட்டுமே என்று அல்லாமல், பதினாராயிரம் தேவிமார் என்பதாக, பரிபூர்ணமாக உள்ளவன் அல்லவோ நீ? எனது தோழிமார்கள் உன்னை வெறுத்து ஒதுக்காதபடி, எனது அஹங்காரத்தையும் மமகாரத்தையும் உள்ளடக்கியதான, எனது பந்தையும் கழலையும் மீண்டும் தந்து விட்டுச் செல்வாயாக", என்கிறாள்.

அவதாரிகை – இப்படி வரவு தாழ்த்ததும் இத்தலையை ஒழியச் செல்லுவதாயன்றிறே; கடுக வந்துகொண்டு நின்றான், பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டான், அலப்ய லாபமென்று தோற்றும்படி நின்றான், இத்தலையில் பண்ணக்கடவ வ்யாமோஹம் அடங்கலும் இவற்றின் பக்கலிலே பண்ணினான். அவன் படுகிற அலமாப்பைக் கண்டு, "இவையெல்லாம் நம்மைக் குறித்துச் செய்கிறானல்லன், தான் கலந்து பிரிந்தவர்களுடைய உபகரணங்களாகக் கொண்டு செய்கிறான் இத்தனை; இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்கிறதென்" என்று, "வாராய்! நினைக்கிறவர்களது அன்று காண் இவை; உனக்கு உபேக்ஷா விஷயமான எங்களதுகாண் இவை, இவற்றைத் தந்து அவர்கள் பக்கலிலேறப் போ" என்ன.

விளக்கம் – இவ்விதம் தாமதமாக வந்தபோதிலும் அவன் இவளை விட்டு அகன்று செல்லவில்லை. மேலும் விரைந்து வந்து நின்றான். இவர்களுடைய பந்தையும் கழலையும் எடுத்துக் கொண்டான். கிட்டாத பேறு கிடைத்தது போன்று நின்றான். இவள் விஷயமாகச் செய்யவேண்டிய மயக்கங்கள் அனைத்தையும், இவளுடைய பந்து மற்றும் கழல்கள் குறித்துச் செய்தான். இவனுடைய இந்தத் தவிப்புகளைக் கண்டு, "இவற்றை இவன் நம்மைக் குறித்துச் செய்யவில்லை. இந்தப் பந்தும் கழலும், தான் முன்பு கலந்த பிரிந்தவர்களுடையது என்று எண்ணியே இவ்விதம் செய்கிறான். இதனை நாம் இவனிடம் கூறாமல் இருப்பது ஏன்?", என்று நாயகியும் தோழிமார்களும் எண்ணினார்கள். அவர்கள் இவனிடம், "வருவாயாக! இந்தப்

பந்தும் கழலும், நீ எண்ணுபவர்களுக்குச் சொந்தமானது அல்ல. நீ ஒதுக்கிய எங்களுடையது ஆகும். இவற்றை எங்களிடம் அளித்து விட்டு, அவர்கள் உள்ள இடத்திற்குச் செல்வாயாக", என்றனர். இதனைக் கேட்ட அவன் இவர்களிடம், "இத்தனை அகலமான பாரத்தை ஒரு நுண்ணிய இடையானது சுமந்தபடி உள்ளதே!" என்று வியப்பாக கூறினான். இதற்கு இவர்கள் மறுமொழி கூறுகிறார்கள்.

வ்யாக்யானம் – "ஓம், அது செய்கிறேன்" என்ன, (மின்னிடைமடவார்கள்) என்கிறார்கள்; "அவர்கள் பாடேறப் போகிறவன் இடையிலே இதொன்றைச் சொன்னான், அதுதான் நிலைநில்லாது" என்று பார்த்து, "வாராய்! நீ உபேக்ஷித்ததொரு விஷயத்திலே இத்தனை கால் தாழ்ந்தால், உன்னை விரும்பியிருப்பார் அநேகராகையாலே போர நெருக்குண்புதி கிடாய். அவர்கள் தங்கள்படி இருந்தபடியென்தான்? இதொரு தேஹ குணமும், ஆத்ம குணமும் இருக்கும்படியே! (மின்னிடை) மற்றும் தேஹ குணத்துக்கு உபலக்ஷணம். (மடவார்கள்) இது நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலான ஆத்மகுணங்களுக்கும் உபலக்ஷணம். மடவாரென்கிற பஹுவசநத்தாலே ஒருவர்க்கு உற்றானாயிராமை சொல்லுகிறது.

விளக்கம் - (மின்னிடை மடவார்கள்) - இவ்விதம் கூறுவதற்கு இரண்டு கருத்துக்கள் உள்ளன. அவன் இவர்களை நோக்கி உரைத்த சொற்கள் நிலையற்றவை என்பதாக முதல் பொருள் கொள்ளவேண்டும்; அதாவது இவர்கள் அவனிடம், "நாங்கள் உன்னுடைய மின்னிடை மடவார்கள் அல்லோம்" என்கிறார்கள். இவர்கள் தங்களுக்குள், "இவன் அவர்கள் குறித்துச் செல்கிறான். நடுவில் நம்மைப் பார்த்ததால் இப்படி ஒரு வாக்கியத்தைக் கூறினான். இது நிலையற்றதாகும்", என்று கூறிக்கொண்டனர். அவனிடம், "இதோ பார்! நீ ஒதுக்கியவர்கள் விஷயத்தில் எந்தவிதமான அன்பும் இன்றி, இது போன்று காலதாமதம் செய்து வருகிறாய். உன்னை விரும்பியுள்ளவர்கள் பலர் உள்ளனர். உனது இந்தச் செயலைக் கண்டால், நீ மற்றவர்களுக்காக தங்களை விடுவதாக அவர்கள் தீர்மானித்து, உன்னைக் காணாமல் இருப்பர். அதனால் நீ துன்பம் கொள்வாய். அவர்களுடைய வடிவம் எப்படி உள்ளது? உன்னைக் கலங்க வைக்கும் வடிவழகும் ஆத்ம குணங்களும் கொண்ட அவர்கள் முன்பாக நீ இவ்விதம் செய்கிறாயே!",

என்றனர். “மின்னிடை – மின்னல் போன்று மெல்லிய இடை” என்பது, அனைத்து உடல் உறுப்புகளின் அழகுக்கு ஒரு உதாரணம் மட்டுமே ஆகும். (மடவார்கள்) - இது நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய அனைத்திற்கும் உதாரணம் ஆகிறது. “மடவார்” என்று பன்மையில் கூறுவதன் மூலம், இவன், ஒருவரிடம் மட்டுமே பொருந்தியபடி உள்ளவன் அல்லன் என்பது கூறப்பட்டது.

வ்யாக்யானம் - நீ அதஸ்மிம்ஸ்தத் புத்தி பண்ணும்படி பண்ணுவிப்பதே அவர்கள் சிலர். இவனுடைய அலமாப்பைக் கொண்டே அவர்களுடைய வைலக்ஷண்யத்தை அநுமிக்கிறாளிறே. பாவியேன், உன்னை இங்ஙனே இடையிலே பிச்சேறித் துடிக்கப் பண்னினார் ஆரோ?

விளக்கம் – அடுத்து, “மின்னிடை மடவார்கள்” என்பதற்கு இரண்டாவது கருத்தும் கூறப்படுகிறது. இவர்கள், “இவன் தனக்கு விருப்பமான பலருடன் கலந்து பழகிய பின்னர், அவர்களைப் பிரிந்து வந்து, நம்மைக் கண்ட பின்னர், அவர்கள் என்று எண்ணி மயங்கி உரைக்கிறான்”, என்று கூறுகிறார்கள். அவனிடம், “நீ ஒன்றை, வேறு ஒன்றாக நினைப்பது ஏன்?”, என்று சிலர் கூறினர். ஆனால், “மின்னிடை மடவார்கள்” என்று அவர்களுடைய மேன்மையை இவர்கள் அறிந்தது எப்படி என்றால், இவனுடைய தவிப்பைக் கொண்டே அவர்களுடைய மேன்மையை இவர்கள் அறியலாம் அல்லவோ? இப்படி நீ நடுவில் எங்களைக் கண்டு பித்துப் பிடித்தபடியும், எங்களுடைய இடைப்பகுதியைக் கண்டு பித்துப் பிடித்தபடியும் உன்னைத் துடிக்க வைத்தது யாரோ? பாபியாகிய நான் அறியவில்லையே!

வ்யாக்யானம் - (மின்னிடை மடவார்கள்) இவனோடு ஸம்பந்தமுடையாருடைய தேஹகுணங்களையும் ஆத்மகுணங்களையும் சுபாச்ரயமாக நினைத்திருந்தபடி தோற்ற வார்த்தை சொன்னபடியென் தான்! ப்ரணயரோஷம் புறவாயிலே செல்லா நிற்கச் செய்தேயும், அகவாயில் நினைவு இதிறே. அகவாயிலும் த்வேஷமேயானாலும் வஸ்து இருந்தபடி சொல்ல வேணுமே; த்வேஷத்தாலே சொல்லுமன்றும் “தருணௌ ரூப ஸம்பந்நௌ” என்றல்லது சொல்லவொண்ணாதே.

விளக்கம் – (மின்னிடை மடவார்கள்) - இவனுடன் ஸம்பந்தம் கொண்டவர்களுடைய சரீர அழகு மற்றும் ஆத்ம குணங்கள் அனைத்தும் மங்களகரமான இடம் போன்று உள்ளன என்று ஆழ்வார் நினைத்தை வெளிப்படுத்திய இந்தச் சொற்கள்தான் என்னே! ஆனால் இங்கு ப்ரணய கோபம் தலைவிரித்தாடும்போது, அதனைப் பற்றுக்கோடாக எண்ணுவது எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார். ப்ரணய கோபம் என்பது புறத்தில் வெளிப்பட்ட போதிலும், உள்ளத்தில் இத்தகைய "மங்களகரமான இடம்" என்பதே உள்ளது. ஆனால் ப்ரணய கோபம் என்பதைக் கொண்டாடலாமா என்று பட்டருடைய கருத்தை வெளியிடுபவராக, உள்ளத்திலும் கோபம் இருந்தாலும், ஒரு வஸ்துவின் தன்மைகளை உள்ளது உள்ளபடி கூறவேண்டும் அல்லவோ? கோபம் கொண்டு உரைத்தாலும், ஆரண்யகாண்டம் (19-14) - தருணௌ ரூப ஸம்பந்நௌ - இளமைப்பருவமும், அழகான ரூபமும் பொருந்தியவர்கள் - என்று சூர்ப்பணகை இராமலக்ஷ்மணர்களைக் குறித்து உரைத்தாள்; "ஒரு வஸ்துவின் தன்மைகளை உள்ளது உள்ளபடி கூறவேண்டும்" என்னும் நியதி அல்லாமல் இவ்விதம் சூர்ப்பணகை கூறமுடியாது அல்லவோ?

வ்யாக்யானம் - (மின்னிடை மடவார்கள்) தங்கள் பாடுகிட்டினால் "இதோரிடையே! இதொரு குணமே!" என்று அவனாழங்கால்படும் துறையறியுமே; "அப்படியேயிறே இவன் போனவிடத்திலும்" என்றிருக்கிறார்கள். இங்ஙனன்றாகில் எதிர்த்தலையைக் கண்டு சொல்லுகிறாளன்றே.

விளக்கம் – (மின்னிடை மடவார்கள்) - அவர்களுடைய மேன்மையை இவர்கள் எப்படி அறிந்தனர் என்று முன்பு கேட்கப்பட்ட கேள்விக்கு, வேறு ஒரு விடையையும் அருளிச்செய்கிறார். நம்மிடம் இவன் வரும்போது, "இது அல்லவோ ஒரு இடுப்பு! இது அல்லவோ ஒரு குணம்" என்று அவன் ஈடுபடும் இடங்களை நாம் அறிவோம். இப்படி அல்லவோ இவன் சென்ற இடங்களிலெல்லாம் செய்வான் என்பதன் மூலம், அவர்களுடைய மேன்மையை இவர்கள் அறிந்தனர். இவ்விதம் அவன் கூறியதை ஒவ்வொரு இடத்திற்கும் கொள்ளவில்லை என்றால், அவர்களை நோக்கி இவ்விதம் கூறவில்லை என்ற முரண்பாடு ஏற்படும்.

வ்யாக்யானம் – இப்படி இருப்பாருமுண்டோ புறம்பே என்ன, (நின்னருள் சூடுவார்) உன்னுடை ப்ரஸாதத்துக்கு பாத்ரபூதைகளாயிருப்பார். இவ்வளவில் "உன் தலையிலே கால் வைக்கப் பிறந்தார்" என்று சொல்லவிறே அடுப்பது; அங்ஙன் சொல்லுமன்று; அது அவனுக்கு இடமாமே; அதாவது, இவள் காலைத் தன் தலையிலே எடுத்து வைத்துக் கொள்ளுமென்கை. உறவு தோற்றாமல் இருக்கிறவள் அங்ஙன் சொல்லாளிறே. பாவபந்தம் அடியாக வந்த கலவியாகையாலும், நினைவும் அத்தலையாலே வந்ததாகையாலும், அவன் வார்த்தையாக நடுவொன்றில்லையே யாகிலும், இடையீடு பொறுக்கக்கடவது.

விளக்கம் – இவ்விதமாக இவர்கள் கூறியதைக் கேட்ட அவன், "இப்படியாக நீங்கள் கூறுவது போன்று வெளியில் யாரேனும் நமக்கு உள்ளனரோ? அவர்கள் யார்?", என்றான். இதற்கு இவர்கள் விடை அளிக்கிறார்கள். (நின்னருள் சூடுவார்) - உனது க்ருபைக்கு ஏற்றவர்களாக உள்ளவர்கள் ஆவர். அது மட்டும் அல்லாமல், "உனது தலையில் கால் வைக்கும்படியாகப் பிறந்தவர்கள்" என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். இந்த இடத்தில், வ்யாக்யானத்தில் உள்ள "உறவு தோற்றாமல்" என்று தொடங்கும் வாக்கியத்தின் பின்னே, "அங்ஙன் சொல்லுமன்று" என்பதைச் சேர்க்க வேண்டும் என்று அரும்பத உரை கூறுகிறது. உறவு வெளிப்படாமல் உள்ள நிலையில், இவள் அது போன்று உரைக்கமாட்டாள். அவ்விதம் கூறவில்லை என்னும்போது அது அவனுக்கு இடம் கொடுத்தது போன்றதாகிவிடும். அதாவது இவள் காலை எடுத்து, அவன் தலை மீது வைத்துக் கொள்பவன் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இதனைத் தவிர்க்க எண்ணுகிறாள். ஆனால் இவர்கள் இவன் மீது இவ்விதம் குற்றம் கூறும்போது, அவன் மறுமொழி ஏதும் கூறாமல் இருப்பானோ? இதற்கு விடை அளிக்கிறார். அதாவது காதல் முன்னாக ஏற்பட்ட சேர்க்கை என்பதால், அவன் முன்பு கூறிய சொற்களே, அவன் கருத்தை உள்ளடக்கியதாக உள்ளன என்று கருத்து. இவர்களுடைய சொற்கள் அனைத்தும் நாயகனுடைய சொற்களையே வெளிப்படுத்துவதாக அமைவது, காதலின் இயல்பு என்பதாகவும் கொள்ளவேண்டும். ஆகவே அவன் கூறிய சொற்களாக ஏதும் இல்லை என்றபோதிலும், அவனுடைய நினைவுகளையே அவன் கூறிய சொற்களாகக் கொள்ளவேண்டும் என்று கருத்து. ஆனால், நினைவு என்பதன் கார்யமாக உள்ள சொல்லை, நினைவு என்று கொண்டு, அதனை "சொல்" என்று கொள்ளலாமோ?

“இந்தச் சொற்களை அங்கே நினைவில் கொள்” என்று கூறும் போது, அங்கு சொற்களை உரைத்ததாகவே கொள்ளவேண்டும் அல்லவோ? அது போன்று இங்கும் கொள்ள வேண்டும். ஆகவே நடுவில் அவன் முன்பு கூறிய சொற்களைக் கொண்டு, அவன் நினைவு அறிந்து, அவற்றை அவன் கூறியதாகவே உரைக்கவேண்டும் .

வ்யாக்யானம் - ஆனாலென்? அவர்கள் இங்கு இல்லையேயென்றான். (முன்பு) எங்களை அவர்களாக நினை. நாங்கள்காண் அவர்களென்கிறாள். “அவையெல்லாமிங்கேயிறே” என்ன வேண்டியிருக்க, தனக்கு வேறே சிலர் உண்டாகச் சொல்லுவானென்? என்னில்; பல கேட்க நினைத்திருக்கிறவன் ஒருவார்த்தையோடே தலைக்கட்டானே; இட்டீடு கொள்ளுகையிறே இவன் தனக்கு தாரகம். (முன்பு) நீ செய்யுமவையெல்லாம் மறைக்கப் போகாது காண். நீ அங்குச் செய்தவை எல்லாம் கண்டாயே நாங்கள் அறிந்தபடி; இப்படியே, நீ இங்குச் செய்யுமவையெல்லாம் அவர்கள் அறிவர்கள் காண். அவர்களுக்கு உன்னைப்போலே வேறு அந்யபரதை இல்லை காண். உன்னைப்போலே நினையாதே கொள்ளாய் அவர்களை. உன்னைக் கலந்து பிரிந்தார் உன்னை ஸாக்ஷாத்கரித்தபடியே இருப்பர்கள் காண்; “பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே திரிந்துழலும் சிந்தனையார்” என்றிறே இருப்பது. அவர்களுக்கு வேறு விஷயமில்லாமையாலே ஸர்வகாலத்துக்கும் ஸ்ம்ருதி விஷயம் நீயே காண். ஆனாலென்? உங்களுக்கு என்னோடொரு ஸம்பந்தமில்லை. ஆன பின்பு அத்தால் வருவதொன்றில்லையே? என்றான்.

விளக்கம் – இதனைக் கேட்ட அவன் இவர்களிடம், “ஆனால் என்ன? அவர்கள் யாரும் இங்கு இல்லை அல்லவோ?”, என்றான். இதற்கு விடை அளிக்கிறார்கள். (முன்பு) - எங்களை அவர்களாகவே எண்ணிக் கொள்வாயாக. உனது செயல்கள் முழுவதையும் நாங்கள் அறிந்தது போன்று, நீ இங்கு செய்யும் அனைத்தையும் அவர்கள் அறிவார்கள். இதற்கு அவன், “எனது காதல் முழுவதும் இங்கு மட்டும் அல்லவோ? வேறு சிலர் எனக்கு உள்ளனர் என்று கூறுவது காதலுக்குப் பொருந்தாது. இப்படி உள்ளபோது, வேறு சிலர் உள்ளனர் என்று கூறுவது ஏன்?”, என்று கேட்டு நின்றான். இதற்கு இவர்கள், “இப்படியாக ஒரு சொல்லைக் கூறி

நம்மிடமிருந்து மறுமொழி கேட்பதற்காகவே இவ்விதம் செய்கிறான். தனக்கு வேறு சிலர் உள்ளனர் என்று கூறுவது அல்ல", என்று எண்ணினார்கள். மேலும் இவர்கள், "நம்மிடமிருந்து பல சொற்களை எதிர்பார்த்து நிற்பவன், ஒரு சில சொற்களோடு நிறுத்தமாட்டான். விவாதம் செய்தபடி உள்ளது அல்லவோ இவனுக்கு ஏற்ற பிழைப்பாக உள்ளது", என்றனர். (முன்பு) – இதனைக் கேட்ட இவன், "அவர்கள் காணாதபடி நான் இங்கு நின்று செய்யும் செயல்களை அவர்கள் எப்படி அறிவர்?", என்றான். இதற்கு விடை கூறுகிறார்கள். நீ செய்யும் செயல்களை மறைக்க இயலாது. நீ அங்கு செய்த அனைத்தையும், நாங்கள் அறிந்ததை நீ கண்டாய் அல்லவோ? அது போன்றே நீ இங்கு செய்வது அனைத்தையும் அங்கு உள்ள அவர்கள் அறிவார்கள்", என்றனர். இதற்கு இவன், "அவர்களைப் பிரிந்து நான் வந்தேன். ஆன பின்னர், அவர்கள் வேறு யாரையும் நோக்க மாட்டார்களோ?", என்றான். இதற்கு விடையாக இவர்கள், "அவர்கள் உன்னைப் போன்று அல்லர். மற்றவர்களைக் காணமாட்டனர். உன்னைப் போன்று அவர்களை நீ எண்ணவேண்டாம். உன்னுடன் கலந்து பிரிந்தவர்கள் எப்போதும் உன்னையே எண்ணி, தங்கள் மனக்கண்ணால் உன்னை நோக்கியபடியே இருப்பார்கள். பெரியதிருவந்தாதி (50) - பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே திரிந்துழலும் சிந்தனையார் - என்று அல்லவோ உன்னைப் பிரிந்தவர்கள் இருப்பர்? அவர்களுக்கு வேறு சிந்தனையும் விஷயமும் இல்லாத காரணத்தால், அனைத்து நேரத்திலும் அவர்களுடைய நினைவிற்கு விஷயமாக நீயே உள்ளாய்", என்றார்கள். இதற்கு இவன், "அதனால் என்ன? உங்களுக்கு என்னுடன் ஒரு சம்பந்தமும் இல்லை என்று கூறிவிட்டீர்கள். இவ்விதம் உள்ளபோது எனது நிலையால் உங்களுக்கு வருவது ஏதும் இல்லை அல்லவோ? அவர்கள் எனது இங்குள்ள நிலையை அறிந்த பின்னர், என்னைப் பாராமல் இருந்தால் கூட உங்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை அல்லவோ?", என்றான். இதற்கு அடுத்து விடை அளிக்கிறார்கள்.

வ்யாக்யானம் - (நானதஞ்சுவன்) உன்னைப் போல் அல்லோம் காண் நாங்கள். நீ இங்கே சிறிதுபோது கால்தாழ்த்துப் போனால், அவர்களுன்னை அரைக்ஷணம் முகம் மாறினால், நீ பொறுக்க மாட்டாமல் கிடந்து துடிக்கும் துடிப்பு நான் காண மாட்டேன்; கலந்து பிரியவல்லாயும் துடிப்புக் காணவல்லாயும் நீயே காண்;

பராநர்த்தங்கண்டால் பொறுக்கமாட்டோங்காண் நாங்கள். உன்னோடு உறவு இல்லையேயாகிலும் நீ படும் அலமாப்புக் கண்டால் பொறுக்கமாட்டோம்; சிலர் கிணற்றிலே விழுந்தால் ஒரு குரல் கூப்பிடும்போது உறவு வேணுமோ? அவர்கள் பக்கல் முகம் பெறாதே நிற்கும் தடுமாற்றத்தை "ஆற்றேன்" என்கிறாள்.

விளக்கம் – (நான் அது அஞ்சுவன்) - "உன்னை" என்று தொடங்கும் வ்யாக்யான வாக்கியத்தை, "நீ இங்கே" என்ற வாக்கியத்தின் பின்னர் வைக்கும்படி அரும்பத உரை கூறுகிறது. இவர்கள் அவனிடம், "நீ இங்கு சிறிது நேரம் இருந்த பின்னர் அங்கு செல்வதற்குக் காலதாமதம் ஏற்பட்டால், அதன் விளைவாக அவர்கள் உன் விஷயத்தில் அரை நொடி முகம் மாறினால் கூட, நீ பொறுக்கமாட்டாய். அதன் விளைவாக நீ துடிப்பதைக் காண எங்களால் பொறுக்க இயலாது", என்றனர். இதற்கு இவன், "இவ்விதம் நம்முடைய துடிப்பைக் காண இயலாமல் நீங்கள் உள்ளதன் காரணம் என்ன?", என்றான். இதற்கு இவர்கள், "இது எங்கள் இயல்பாகும். நாங்கள் உன்னைப் போன்று அல்ல. கலந்து பிரிவதில் வல்லவனாகவும், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் துடிப்பைக் காண்பதற்கு வல்லவனாகவும் நீ உள்ளாய். மற்றவர்களுடைய வேதனையைக் கண்டு நாங்கள் பொறுப்பவர்கள் அல்லர்", என்றனர். இதற்கு இவன், "எனது நிலை எப்படியானால் உங்களுக்கு என்ன? என்னுடன் எந்தவிதமான ஸம்பந்தமும் உங்களுக்கு இல்லை என்றீர்கள் அல்லவோ?", என்றான். இதற்கு விடையாக, "உன்னுடன் உறவு முறை ஏதும் இல்லை என்றாலும், உனது தடுமாற்றத்தை எங்களால் பொறுக்க இயலாது. யாரேனும் கிணற்றில் விழுந்தால், உதவிக்கு அழைப்பதற்கு உறவுமுறை வேண்டுமோ?", என்றனர். இவன் காலதாமதமாகச் செல்வதால் அவர்கள் இவன் முகத்தைக் காணாமல் இருந்து, அதன் விளைவாக இவனுக்கு ஏற்படும் தடுமாற்றத்தை "பொறுக்கமாட்டேன்" என்று கூறுகிறாள்.

இதுவரை "மின்னிடை" என்று தொடங்கும் முதல் வரிக்கான கருத்து கூறப்பட்டது; அது என்னவென்றால், "மின்னல் போன்ற மெல்லிய இடையும், பவ்யமாக இருத்தல் போன்ற ஆத்மகுணங்களையும் கொண்டவராக, உனது க்ருபையைத் தங்கள் தலையால் ஏற்கும் அவர்கள் அருகில் நீ உள்ளபோது செய்தபடி உள்ள செயல்களை நான் அறிவேன். இப்படி உள்ளபோது, நீ இங்கு செய்யும் செயல்களை அறிந்து, நீ தடுமாறி நிற்கும்படியாக, உனக்கு முகம் காண்பிக்காமல்

அவர்கள் இருப்பர். இதன் விளைவாக உன்னை அவர்கள் வெறுப்பர் என்று எண்ணி மிகுந்த அச்சம்கொண்டேன்", என்பதாகும்.

வ்யாக்யானம் - அரைக்ஷணம் இத்தலையையொழிய ஜீவிக்கமாட்டாத செல்லாமையையுடைய என்னைப் பொய்யனாக்கிப் புறம்பாக்கி வார்த்தை சொல்லுவதே! என்றான். (மன்னுடையிலங்கையரண் காய்ந்த மாயவனே) "என்தான்? நீ பொய்யனல்லையோ?" என்றாள். "நான் என்னோடு பரிமாறினாரில் இதுக்கு முன்பு ஆர்க்குப் பொய் செய்தேன்?" என்றான்; "நீதான் ஆர்க்கு மெய் செய்தாய்" என்றாள்; "என்தான், 'உண்ணாதுறங்காதொலி கடலையூடறுத்து' என்று, ஏகதார வ்ரதனாய்க் கொண்டு நான் பட்டதெல்லாம் பொய்யோ?" என்றான். "அதுதான் நீ வேண்டிச் செய்தாயோ? ஒரு துறையிலே ஒரு மெய் பரிமாறாவிடில், நமக்கு மேல் உள்ளதெல்லாம் ஒரு தொகையில் அகப்படாதென்று செய்தாயத்தனையன்றோ? அபலைகளை அகப்படுத்திக் கொள்ள இட்ட வழியன்றோ?"

விளக்கம் – அடுத்து, "மன்னுடை" என்ற இரண்டாவது வரிக்கான அவதாரிகையைக் கூறுகிறார். இவன் அவர்களிடம், "உங்களை விட்டு அரை நொடிப்பொழுதும் கூட உயிர் தரிக்காதபடி உள்ள என்னை நோக்கி, 'எங்களை நீ அவர்களாக எண்ணியே வார்த்தைகள் கூறினாய்' என்று பொய்களை உரைப்பவனாக, எனது நிலைக்குப் புறம்பான சொற்களைக் கூறுவது ஏன்?", என்றான். இதற்கு இவர்கள் விடை அளிக்கிறார்கள். (மன்னுடை இலங்கை அரண் காய்ந்த மாயவனே) - இவள் அவனிடம், "ஏன் கூறக்கூடாது? நீ பொய்களை உரைப்பவன் அல்லவோ?", என்றாள். உடனே இவன், "என்னுடன் கலந்து பழகியபடி உள்ள யாரிடம் இதற்கு முன்பு நான் பொய்களைக் கூறினேன்?", என்றான். இதற்கு இவள், "நீ யாரிடம்தான் உண்மையாக இருந்தாய்?", என்றாள். இதற்கு இவன், "என்ன இவ்விதம் கூறுகிறாய்? நாச்சியார் திருமொழி – உண்ணாது உறங்காது ஒலி கடலை ஊடறுத்து – என்பதாக, ஒரே பத்னி விரதம் மேற்கொண்டு நான் பட்டபாடு அனைத்தும் பொய்யோ?", என்றான். இதற்கு இவள், "அதனை நீ விருப்பத்துடன் செய்தாயோ? ஏதேனும் ஒரு சூழ்நிலையிலாவது உண்மையாக இல்லையென்றால், இனி வரப்போகும் நாட்களில், உனது பிடியில் அகப்படாமல் போகும் என்று எண்ணி அல்லவோ

செய்தாய்? பலம் அற்ற பெண்களை உனது வழிக்குக் கொண்டு வருவதற்கு நீ செய்யும் உபாயங்கள் அல்லவோ இவை?", என்றாள்.

வ்யாக்யானம் - (மன்னுடையிலங்கையரண் காய்ந்த) நிலமிதிதா னெதிரிகள் மண்ணுண்ணும்படியாய், அதுக்கு மேலே "லங்காம் ராவண பாலிதாம்" என்று கொண்டு, ஸிம்ஹங் கிடந்த முழஞ்சுபோலே பையலுணர்ந்து நோக்குகிற ஊரையழியச் செய்த. (மன்னுடை) மன்னனையுடைய. (மாயவன்) க்ருத்ரிம வ்யாபாரத்தை உடையவன். "அழகிது. ஒரு மெய்யுமுண்டாகச் சொன்னாயே; அத்தை இங்கே செய்தேனானாலோ? மேலுள்ளதும் எல்லாமாகைக்காக" என்றான்.

விளக்கம் - (மன்னுடை இலங்கை அரண் காய்ந்த) - அந்த நிலத்தின் இயல்பானது, எதிரிகள் வந்து தோற்கும்படியாகவும், அதற்கும் மேல் ஸுந்தரகாண்டம் (1-34) - லங்காம் ராவண பாலிதாம் – இராவணனால் காக்கப்படும் இலங்கை - என்பதாக, சிங்கம் உறங்கிக் கிடக்கும் புதர் போன்றுள்ளதான, இராவணன் நன்கு காப்பாற்றியபடி உள்ள இலங்கை அழியும்படிச் செய்த. (மன்னுடை) – மன்னனைக் கொண்ட இலங்கை. (மாயவன்) - வஞ்சனை நிறைந்த செயல்கள் கொண்டவன். இதற்கு இவன், "சரி, ஒரு உண்மையாவது உள்ளது என்று ஏற்றாயே! அந்தச் செயலை, உன்னை அகப்படுத்துவதற்காகச் செய்தால் என்ன? இனி செய்யப் போவதும் அதற்காகவே என்று கொள்வாயாக", என்றான்., இதற்கு, இவள் பதில் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (உன்னுடைய சுண்டாயம் நானறிவன்) அது உனக்குச் செய்யலாவது செவ்வே பரிமாறுமவர்களோடு காண்; நீ செய்கிறவையெல்லாம் பண்டே எனக்கு ஜ்ஞாதங் காண்; நீ செய்கிறவையெல்லாம் 'மெய்' என்றிருப்பாள் ஸ்ரீஜநகராஜன் திருமகள் காண். உன்னுடைய க்ருத்ரிம லீலைகளெல்லாம் நானறிவன். சுண்டாயம் - ஸ்வார்த்த பரத்வம். "அறிந்தென், அறியாவிடிலென்? ப்ரவ்ருத்தமாயிற்றே" என்றான். (இனியது கொண்டு செய்வதென்) "ஸாத்யமாயிற்று அதிறே" என்றான். "ஸாத்யாம்சத்துக்கு ஒரு ப்ரயோஜம் கண்டிலோமீ" என்றாள். அதாவது, "நானறிந்த பின்பு உன் க்ருத்ரிமத்தை முன்னிட்டு என்பக்கல்

ப்ரயோஜநமில்லை"யென்கை. அவனும் ஒன்றை நினைத்து "ஆகில் எனக்கு ஸாத்யாம்சம்தான் இல்லையோ?" என்றான்;

விளக்கம் – (உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன்) - அவற்றை நீ நன்றாகக் கலந்து பழகுகின்ற அவர்களிடம் சென்று காண்பிப்பாயாக. நீ செய்யும் அனைத்தையும் நான் முன்பே அறிவேன். நீ செய்யும் அனைத்தையும், உண்மை என்றே, ஜனகருடைய புத்ரியாகிய சீதை நம்பியிருப்பாள். உனது வஞ்சனை நிறைந்த செயல்கள் அனைத்தையும் நான் அறிவேன். சுண்டாயம் என்றால் தனது செயல்களில் மட்டுமே நோக்கம் கொண்டபடி இருத்தல். இதற்கு இவன் அவளிடம், "நீ இவற்றை அறிந்தால் என்ன? அறியாவிட்டால் என்ன? நீ என்னை நோக்குதல், நோக்கிப் பேசுதல் ஆகியவை நடைபெற்றபடி உள்ளன அல்லவோ?", என்றான். மேலும், (இனி அது கொண்டு செய்வது என்) – "இவை அனைத்தும் சாத்தியமானது அல்லவோ?", என்றான். இதற்கு இவள், "இது போன்ற நமது உரையாடல்கள் மூலம் நாம் எந்தப் பலனையும் காணவில்லை. அதாவது, உனது செயல்களில் உள்ள வஞ்சகத்தன்மை குறித்து நான் அறிந்த பின்னர், எந்தப் பயனையும் நான் காணவில்லை", என்றாள். உடனே அவன் இவர்களுடைய பந்தையும் கழலையும் தான் எடுத்துக் கொண்டதை எண்ணியவனாக, "ஆனால் எனக்கு எதுவும் பயன் பெறும்விதமாக நடக்கவில்லையோ?", என்றான்.

வ்யாக்யானம் - என்றவநந்தரத்தே, கைப்பட்ட பந்தையும் கழலையும் கொண்டு போகப்புக்கான். கைப்பட்ட பந்தையும் கழலையும் போர விரும்பப் புக்கான். "பாவியேன்! நீ எங்கே செய்யக் கடவத்தை எங்கே செய்கிறாய்? அவை நினைக்கிறவர்களதன்று காண், அவை என்னது காண்" என்றாள். "அதுதான், மெய்யே" என்றான். இவன் விருப்பத்துக்கு அதுதானேயிறே வேண்டுவது; "யஸ்யை தே தஸ்ய தத் தநம்" என்று மற்றையது அநந்தரத்தே வருமிறே. அதாவது, ஸ்வரூப ஜ்ஞாநமுடைய உன்னுடைய மமகார விஷயம் அடங்கலும் என்னதன்றோ என்று போகத் தொடங்கினான்.

விளக்கம் - (என்னுடைய பந்துங் கழலும்) - இப்படிக் கூறிவிட்டு, இவர்களுடைய பந்தையும் கழலையும் கொண்டு செல்ல முயற்சித்தான். இதனைக் கண்ட இவள், "நான் மிக்க பாபம் செய்தவளே ஆகிறேன். நீ யாரிடம் இந்த விளையாட்டுகளைச் செய்ய எண்ணியவனாக, இங்கு வந்து இவற்றைச் செய்கிறாய்? இந்தப் பந்தும் கழலும், நீ எண்ணுபவர்களுக்குச் சொந்தமானவை அல்ல. அவை என்னுடையது ஆகும்", என்றாள். இதற்கு இவன், "அது மெய்யா? சரி, அப்படியே உண்மையை இருந்தால்தான் என்ன? அவைகள் உன்னுடையதாக இருந்தால் என்ன?", என்றான். இதற்கு விடை அருளிச்செய்கிறார். இவனுடைய விருப்பத்திற்கு இதுவே பொருத்தும்; இதனை விளக்குகிறார்; மஹாபாரதம் உத்யோகபர்வத்தில் – யஸ்யை தே தஸ்ய தத் தநம் - இவர்கள் யாருக்கு அடிமைப்பட்டவர்களோ, அவருக்கு இவர்களுடைய தனங்களும் சொந்தம் – என்பதற்கு ஏற்ப, இவர்கள் அவனுடையவர்கள் என்றுள்ளபோது, இவர்களுக்குச் சொந்தமான பந்தும் கழலும் அவனுக்குச் சொந்தம் அல்லவோ? வ்யாக்யானத்தில் "மற்றையது" என்பது "அடிமையின் அனைத்தும் எஜமானனுக்குச் சொந்தம்" என்று கூறுகிறது.

வ்யாக்யானம் - இனி ப்ரவேத்திலே, "முடியப் பார்க்கிறாள்" என்று சொல்லிற்று ஒன்றுண்டு. அது, இப்பதத்திலே தோற்றுகிறது. அவன் ஸந்நிதியிலே "என்னது" என்று சொல்லுகைக்கு மேற்பட்ட முடிவில்லை இறே; "த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யு:" இறே. "மாமகா: பாண்டவாச்சைவ" என்கிறவிடத்துக்குச் சிறியாத்தான் சொல்லும்படி – "என்னுடையவர்களென்றும் பாண்டவர்களென்றும் பிரித்தான், அதிறே விநாச பர்யந்தம் ஆக்கிவிட்டது" என்று. இதுதான் தத்த்வகதையே அன்று, ப்ரணய கோஷ்டியிலும் கலவியிலே வந்தால் "உன்னது, என்னது" என்கையிறே உறவறுகையாவது.

விளக்கம் – அடுத்து, இந்தத் திருவாய்மொழியின் ப்ரவேசத்தில், "முடியப் பார்க்கிறாள்" என்று கூறப்பட்டது; அந்தக் கருத்தானது, "என்னுடைய பந்தும்" என்று வாக்கியத்தில் வெளிப்பட்டது. எப்படி? அவன் அருகில் உள்ளபோது, "என்னுடையது" என்று சொந்தம் கொண்டாடுவதைப் போன்று, முடிந்து போக வேறு உயர்ந்த காரணம் ஏதும் அவசியம் இல்லை! அது எப்படி? "நான், எனது" என்று கூறுவது, அழிவிற்குக் காரணம் என்று சாஸ்த்ரங்கள் கூறுவதைக்

கூறுகிறார்; பாஞ்சராத்ரத்தில் - த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யு: - மம என்ற இரண்டு எழுத்துக்கள் அழிவின் காரணம் - என்பது காண்க. கீதை (1-1) – மாமகா: பாண்டவாச்சைவ - எனது புத்திரர்களும் பாண்டுவின் புத்திரர்களும் - என்று கூறுவது குறித்து சிறியாத்தான் என்பவர், "என்னுடையவர்கள் என்றும், பாண்டவர்கள் என்றும் பிரித்து உரைத்தான். அத்தகைய மமகாரம் அல்லவோ அழிவு வரை கொண்டு சென்றது", என்றார். இது உண்மையான சொற்கள் மட்டும் அல்ல; ப்ரணய விஷயத்தில் வந்தாலும், அழிவிற்குக் காரணமாகிறது. சேர்கையில் வந்தபோதிலும், "உன்னுடையது, என்னுடையது" என்று உரைத்தால், உறவானது அறுவதற்குக் காரணமாகிறது.

வ்யாக்யானம் - (என்னுடைய பந்துங் கழலும்) "ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத்" என்கிறபடியே ஒன்றையொன்று உபாஸியா நிற்கச்செய்தே, தன்னை உபாஸித்ததென்று சொல்லலாம்படியிறே இரண்டு வஸ்துவுக்கும் ப்ரத்யாஸத்தி இருந்தபடி. ஸ்வரூபம் விசதமானால், "நான்" என்னவுமாய், "அடியேன்" என்னவுமாய்க் காணும் இருப்பது.

விளக்கம் – (என்னுடைய பந்துங் கழலும்) - உண்மையாக உள்ள நிலையில் "என்னுடையது" என்று கூறுதல், உறவு அறுவதற்குக் காரணம் என்றால், உறவு அறுந்து போகாமல் உள்ளவிதம் எது என்பதற்கு விடை அளிக்கிறார். "ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத் – தான் என்பதாகவே பரமாத்மாவை த்யானிப்பானாக" என்பது காண்க. இங்கு சேதநன் ஸர்வேச்வரனை உபாஸித்தபோதிலும், தன்னையே உபாஸித்தான் என்று கூறலாம்படி, "சரீரம் மற்றும் சரீரத்தைக் கொண்டவன்" என்ற ஸம்பந்தம் உள்ளது; இவ்விதம் இந்தச் சரிரமாக அவனுடைய அபிமானத்தில் அடங்கியபடி இருத்தல் என்பது, அவனுடனான உறவு அறுகாமல் இருப்பதற்குக் காரணமாகிறது. ஆனால் அவன் நம்மை "என்னுடையது" என்று கொண்டாடும்படியான நிலைக்குக் காரணமாக உள்ளது, "அடியேன்" என்று கூறினால் அல்லவோ என்பதற்கு "ஸ்வரூபம்" என்று தொடங்கி விடை அளிக்கிறார்; ஆத்ம ஸ்வரூபம் தெளிவாக உள்ளபோது, "நான்" என்றும், "அடியேன்" என்றும் கூறுவது காணலாம்.

வ்யாக்யானம் - (தந்து போகு நம்பீ) நீ இங்கே கால்தாழாநின்றாய்; இதுக்கொரு தாத்பர்யம் அறியாதே உன்னையுபேக்ஷிக்கத் தொடங்குவர்கள்; அதுக்கு முன்னே போ. (நம்பீ) முகப்பழக்கமும் இன்றிக்கே இருந்தது; முதலியாருமாயிரா நின்றீர்; கடுகப் போகப் பாரும். "கண்ட காட்சி புல்லெழுந்து போனபடியிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது" என்று பெரியமுதலியார் வார்த்தை. என்னுடைய பந்துங்கழலும் என்றவிடம், அவன் பொகடுகைக்குச் சொன்ன வார்த்தை. "தந்து போகு" என்றவிடம் அவன் விரும்பினவை யொழியத் தனக்குச் செல்லாது என்னுமிடந் தோற்றுகிறது. (நம்பீ) "ஷோட ஸ்த்ரீ ஸஹஸ்ராணீ" என்று உமக்குப் போனவிடமெங்கும் கொண்டாட்டத்தால் குறையில்லை, எங்களுக்கு உம்மைக் கிடையாது; இனி உம்முடைய கர ஸ்பர்சம் உண்டாய்ப் பொகட்டவை கொண்டாகிலும் எங்களுக்கு ஜீவித்துக் கிடக்கவேணும்; ஆன பின்பு அவற்றை எங்களுக்குத் தந்துபோம். "உயிரை வைத்துப்போம்" என்பாரைப்போலே. இவன் இவை கைவிட்டுப் போகமாட்டான் என்று அறிந்து, மர்மஜ்ஞை ஆகையாலே "தந்து போ" என்கிறாள்.

விளக்கம் - (தந்து போகு நம்பீ) - "போகு" என்று கூறுவதன் கருத்தை அருளிச்செய்கிறார். நீ இங்கு வெகு நேரம் நிற்கிறாய். இதற்கு ஒரு உண்மையான எண்ணத்தை அறியாமல், உன்னை அவர்கள் வெறுத்து ஒதுக்கத் தொடங்குவார்கள். அதற்கு முன்பாக நீ செல்வாயாக. (நம்பீ) - உம்முடைய முகம் பழக்கம் அற்றதாக உள்ளது. நீ விரைவாக இங்கிருந்து செல்வாயாக. ஆனால், இவனை இதற்கு முன்பு கண்டதில்லையோ என்பதற்கு ஆளவந்தார், "இதற்கு முன்பு கண்ட காட்சியானது புல் எழுந்தது போன்று மறைந்தது. ஆகவே இவள் இவ்விதம் கூறுகிறாள்", என்பார். "என்னுடைய பந்தும் கழலும்" என்பது, அவன் பொருள்களை விட்டுச் செல்வதற்காக இவள் உரைத்த சொற்கள் ஆகும். "தந்து போகு" என்பது, அவன் விரும்பியவை அல்லாமல் உள்ள எதனையும் தான் ஏற்க இயலாது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. (நம்பீ) – ஸ்ரீவிபு. (5-31-17) - ஷோட ஸ்த்ரீ ஸஹஸ்ராணீ - பதினாறாயிரம் பெண்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப, நீ செல்லும் இடம் எங்கும் உனக்குக் கொண்டாட்டமாகவே உள்ளதால், கூற ஏதும் இல்லை. ஆனால் எங்களுக்கு உன்னை விடுத்து வேறு கதி இல்லை. இனி உம்முடைய திருக்கரத்தின் தீண்டுதல் ஏற்பட்டு, விட்டுச் செல்லக்கூடிய பொருள்களைக் கொண்டாவது நாங்கள் உயிர் பிழைக்கிறோம். ஆகவே

எங்களுடைய பந்தையும் கழலையும் விட்டுச்செல்வாயாக; அல்லது, "உயிரை விட்டுச் செல்வாயாக" என்று கூறுவது போன்று உரைக்கிறாள். இவன் இவற்றை விட்டுச் செல்லமாட்டான் என்று அறிந்து, அவனுடைய உள்ளக் கருத்தை அறிந்தவராக, "தந்து விட்டு செல்வாயாக", என்றனர்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 115)

63. ரகு வர! யத் அபூ: த்வம் தாத்ருச: வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளு: யத் ச சைத்யஸ்ய க்ருஷ்ண
ப்ரதிபவம் அபராத் து: முக்த ஸாயுஜ்யத: அபூ:
வத கிம் அபதம் ஆக: தஸ்ய தே அஸ்தி க்ஷமாயா:

பொருள் – ரகுவம்சத்தில் அவதரித்தவனே! உன் விஷயத்தில் மிகுந்த பாபம் செய்த காகாஸுரன் குறித்து, அவன் சரணம் புகுந்தவன் என்பதாகக் கொண்டு நீ க்ருபை செய்தாய் அல்லவோ? எந்தத் தோஷமும் இல்லாத க்ருஷ்ணா! ஒவ்வொரு ஜன்மத்திலும் உனக்குத் தவறுகள் இழைத்த சேதி மன்னனாகிய சிசுபாலனுக்கு மோக்ஷம் அளித்தாய் அல்லவோ? எனக்கு க்ருபை செய்வாயாக.

அவதாரிகை – “புத்திபூர்வேண பண்ணின ப்ராதிகூல்யங்களைப் போக்கப்போமோ?” என்ன; “சிசுபாலாபராதத்தையும் பொறுத்தருளின தேவருக்குப் பொறுக்கமுடியாதது உண்டோ?” என்கிறார்.

விளக்கம் – ஸர்வேச்வரன் இவரிடம், “நீவிர் உமது புத்தி அறிந்து செய்த பாபங்களை நாம் போக்க முடியுமோ?” என்றான். இதற்கு இவர், “காகத்தின் தவறுகளையும், சிசுபாலனுடைய குற்றங்களையும் பொறுத்துக் கொண்டு, அவர்களுக்கு மோக்ஷம் அளித்த உன்னால், பொறுத்துக் கொள்ள இயலாத ஒன்று உள்ளதோ?”, என்கிறார்.

வ்யாக்யானம் - (ரகுவர) சரணாகத ரக்ஷணம் பண்ணிப் போந்த ரகு ப்ரப்ருதிகள் காதகர் என்னும்படி சரணாகத ரக்ஷணத்திலே அதிகராயிருக்கை. ரகு ராக்ஷஸ ஸம்வாதத்தில் சரணாகத ரக்ஷணம் பண்ணிப் போந்தவர்களளவன்றிக்கே, "ஸுக்ரீவம் சரணம் கத:" என்றும், "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே" என்றுமிறே இவர் படி. (தாத்ருச:) அப்படிப்பட்டவன் என்னுமதொழிய அனுபாஷிக்கைதான் அஸஹ்யமாம்படியிறே பண்ணின அபராதம். (வாயஸஸ்ய) அபராதம் பண்ணுகைக்காக, ப்ராப்தமான தேவத்வத்தை விட்டு நிஹீனமான திர்யக்த்வத்தைப் பரிக்ரஹித்தானென்கை. (ப்ரணத இதி) "ஸ பித்ரா ச பரித்யக்த:" என்கிறபடியே, இவனைப் பரிக்ரஹிக்கில் நமக்கு அனர்த்தம் என்று ஸர்வரும் உபேக்ஷிக்க, புகலற்று "ஸ தம் நிபதிதம் பூமௌ" என்கிறபடியே விழுந்தவனை சரணாகதனென்று ப்ரதிபத்தி பண்ணி. ருஷி, "சரணாகதம்" என்றதும் ராமாபிப்ராயத்தாலே. (த்வம் தயாளுரபூ:) ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்காமளவிலே தேவர் "க்ருபயா பர்யபாலயத்" என்கிறபடியே தயாளுவானீர். "க்ஷிபாமி" என்றும், "ந க்ஷமாமி" என்றும் பண்ணி வைத்த ப்ரதிஜ்ஞை பலியாதே, தேவர் க்ருபாகார்யமே பலித்துவிட்டது பிராட்டி ஸந்நிதியாகையாலிறே. (யச்ச) ச சப்தத்தாலே, "காகாபராதத்தைப் பொறுத்தவளவேயோ?" என்று உதாஹரணாந்தரத்தை ஸமுச்சயிக்கிறார்.

விளக்கம் - (ரகுவர) - சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்றியபடி உள்ள ரகு வம்சத்து அரசர்கள், ஒரு படி தாழ்ந்தவர்கள் என்று கூறலாம்படியாக, சரணம் புகுந்தவர்கள் விஷயத்தில் உயர்ந்தவன். ரகு மற்றும் ராக்ஷஸர்கள் விஷயங்களில், சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்றியவர்கள் அளவு மட்டும் இல்லாமல், கிஷ்கிந்தாகாண்டம் (4-19) - ஸுக்ரீவம் சரணம் கத: - ஸுக்ரீவனை இராமன் சரணம் புகுந்தான் – என்றும், யுத்தகாண்டம் (41-4) - த்வயி கிஞ்சித் ஸமாபந்நே - ஸுக்ரீவா! உனக்கு ஏதேனும் அவமானம் ஏற்பட்டால் – என்றும் உள்ளதாக அல்லவோ இராமனின் விதம் உள்ளது! (தாத்ருச:) - காகாஸுரன் அப்படிப்பட்டவன் என்று கூறுவது அல்லாமல், அவன் செய்த செயல்களை மீண்டும் கூறினால் பொறுத்துக் கொள்ள இயலாதபடி உள்ள தோஷங்கள். (வாயஸஸ்ய) - உன்னிடம் தவறு இழைப்பதற்காக, தனக்கு இருந்த தெய்வத்தன்மையை விட்டு, ஒரு பறவையின் தன்மையைக் கைக்கொண்டான்.

(ப்ரணத இதி) - ஸுந்தரகாண்டம் (38-34) - ஸ பித்ரா ச பரித்யக்த: - அந்தக் காகாஸுரனுடைய தந்தையும் அவனைக் கைவிட்டான் - என்பதற்கு ஏற்ப, இவனைக் கைக்கொண்டால் நமக்குக் கெடுதல் உண்டாகும் என்று அனைவரும் அவனைப் புறக்கணித்தனர். அவன், வேறு புகலிடம் இல்லாமல், ஸுந்தரகாண்டம் (38-35) - ஸ தம் நிபதிதம் பூமௌ – உனக்கு முன்பாக பூமியில் விழுந்தான் - என்பதற்கு ஏற்ப விழுந்தவனை, சரணம் புகுந்தான் என்பதாகவே எண்ணி. வால்மீகி ஸுந்தரகாண்டம் (38-35) – சரணாகதம் – சரணம் புகுந்த – என்று கூறியது, இராமனுடைய திருவுள்ளத்தில் ஓடும் எண்ணத்தைக் கூறுவதாகிறது. ((த்வம் தயாளுரபூ:) – அவன், நீ விடுத்த ப்ரஹ்மாஸ்த்ரத்திற்கு இலக்காக வேண்டியவன்; ஆனால் நீ, ஸுந்தரகாண்டம் (38-35) – க்ருபயா பர்யபாலயத் - தனது அருளால் காப்பாற்றினான் - என்பதற்கு ஏற்ப, தயை குணம் கொண்டவனாக நின்றாய். கீதையில் (16-19) – க்ஷிபாமி – தள்ளுகிறேன் – என்றும், வராஹபுராணத்தில் – ந க்ஷமாமி – பொறுத்துக் கொள்ளமாட்டேன் - என்றும் நீ செய்த உறுதிமொழிகள் பலிக்காமல், உனது க்ருபை என்ற செயல் பலித்ததன் காரணம், சீதை அருகில் இருந்ததால் ஆகும். (யத் ச) - இங்குள்ள “ச – உம்மைத்தொகை” என்பதன் மூலம், “காகாஸுரனுடைய அவதாரங்களை பொறுத்துக்கொண்டதும்” என்று அடுத்து கூறுகிறார்.

வ்யாக்யானம் - (சைத்யஸ்ய) யது வம்ச பூதரிற்காட்டில், சேதி குலோத்பவனென்று தன்னை உத்க்ருஷ்டனாக அபிமானித்திருக்குமவன். (ப்ரதிபவம் அபராத் து:) காகத்தைப் போலே ஒருகால் அபராதத்தைப் பண்ணினவளவன்றியே ஜன்மந்தோறும் ப்ராதிகூல்யத்திலே வாஸனை பண்ணினவனுக்கு. (ஸாயுஜ்யத: அபூ:) “பஹுநாம் ஜந்மாந்தே” என்றும், “அநேக ஜந்ம ஸம்ஸித்த:” என்றும் ஜன்மந்தோறும் ஆச்ரயித்தார் பெறும் பேற்றையிறே கொடுத்தது. ஸாயுஜ்யமாகிறது, ஸமான குண யோகம். “ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ர பக்தாஸ் தபஸ்விந: | கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா:”. (முக்த) “ஆயர்குலத்தீற்றிளம்பிள்ளை" என்கிறபடியே அபராதாநபிஜ்ஞனிறே க்ருஷ்ணன். அதுக்கு மேலே ஒரு பேற்றை, முடிக்கிற தசையிலே ஸுகரூபமான வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கின ஏற்றம். (தஸ்ய தே க்ஷமாயா: அபதமாக: கிமஸ்தி) காலபேதத்தாலே தேவர் வேறேயொருவனாகிறீரல்லீர். தேவர் க்ருபைக்கு அவிஷயமான பாபம் உண்டோ? கிம் க்ஷேபே. அபதம் - அஸ்தானம்; அவிஷயம்

இத்யர்த்த:. (வத) ஸர்வஜ்ஞரான தேவருக்கும் மறுமாற்றமில்லை; க்ஷமைக்கு விஷயீகரிக்குமித்தனை என்கை.

விளக்கம் - (சைத்யஸ்ய) - யது குலத்தில் பிறந்தவர்களைக் காட்டிலும், சேதி குலத்தில் பிறந்தவன் என்று தன்னை உயர்ந்தவனாக எண்ணுபவன். (ப்ரதிபவம் அபராத் து:) - காகாஸுரன் போன்று ஒருமுறை மட்டுமே பகவத் விஷயத்தில் தவறு இழைக்காமல், ஒவ்வொரு ஜன்மத்திலும் பகவானுக்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டபடி உள்ளவனுக்கு. (ஸாயுஜ்யத: அபூ:) – கீதை (7-19) – பஹூநாம் ஜந்மாந்தே - பல பிறவிகளுக்குப் பின்னர் ஞானியாகி – என்றும், கீதை (6-45) - அநேக ஜந்ம ஸம்ஸித்த: – பல ஜன்மங்களில் ஸித்தி பெற்றவன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, பல பிறவிகளாகத் தன்னையே அண்டி நிற்பவர்கள் அடையும் பேற்றை அல்லவோ அளித்தான்? ஸாயுஜ்யம் என்பது அவனைப் போன்ற குணங்களுடைய சேர்க்கை; பரமஸம்ஹிதை - ஸாயுஜ்யம் ப்ரதிபந்நா யே தீவ்ர பக்தாஸ் தபஸ்விந: | கிங்கரா மம தே நித்யம் பவந்தி நிருபத்ரவா: - யார் உயர்ந்த பக்தியைச் செய்கிறார்களோ, யார் ப்ரபத்தி என்ற தவம் இயற்றுகிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் என்னுடன் ஸாயுஜ்யம் அடைந்தவர்களாக, ஸம்ஸாரத்துக்கம் நீங்கப் பெற்றவர்களாக, எப்போதும் எனக்குக் கைங்கர்யம் செய்தபடி உள்ளனர் - என்பது காண்க. (முக்த) – திருவாய்மொழி (7-6-10) – ஆயர்குலத்தீற்றிளம்பிள்ளை - என்பதற்கு ஏற்ப, அடியார்கள் செய்யும் அபராதங்களை அறியாதவன் அல்லவோ க்ருஷ்ணன்? அதனையும் விட ஒரு படி மேலே சென்று, ஒரு பேற்றை அவர்களை முடிக்கும் நேரத்தில் அளிப்பதாக, ஸுக ரூபமான தனது வடிவத்தை அவர்கள் காணலாம்படிச் செய்யும் ஏற்றம் கொண்டான். (தஸ்ய தே க்ஷமாயா: அபதமாக: கிமஸ்தி) – காலத்தின் மாறுபாடு காரணமாக நீ வேறு ஒருவனாக மாறுவதில்லை. உன்னுடைய க்ருபைக்கு எட்டாத பாபம் உள்ளதா? (வத:) - அனைத்தும் அறிந்த உனக்கும் வேறு இடம் இல்லை. உனது அடிமை குணத்திற்குப் போக்கிடமாக நான் உள்ளேன்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்